# கிறிஸ்துவுக்கு புகழ்

அன்பின் வாசக நெஞ்சங்களே!

ஆனி மாதம் ஆண்டவர் இயேசுவின் திரு இருதயத்தை நினைவு கூர்ந்து வழிபாடுகள் இடம் பெறும் காலம். ஷஷஇயேசுவின் திரு இருதயமே எங்கள் சினேகமாயிரும்'' என்று இருதயத்தில் அன்பையும், தாழ்ச்சியையும் முன்னுதாரணமாகக் கொண்டு எங்கள் இருதயத்தை உங்கள் இதயமாக மாற்றும் நிலமை வரவேண்டுமென்று அதாவது நாங்கள் இறைமகன் இயேசுவிலே நம்பிக்கை வைத்து அன்புள்ளவர்களாக, இரக்கமுள்ளவர்களாக இருக்க அருள்வேண்டுகின்ற காலம். ஆனிமாதம் முக்கியமாக தேவநற்கருணைக்கு ஒப்புக்கொடுக்கின்ற மாதாக இருக்கின்றது. அதிக நேரம் தேவநற்கருணைக்கு முன்பாக இருந்து செபிக்கின்றகாலமாக உள்ளது. திருமணித்தியாலங்கள் என்ற செப பக்தி முயற்சிகளை செய்யவும், அதிகமாக தேவநற்கருணை ஆண்டவரை அன்பு செய்யவும், இந்த மாதத்தில் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஒரு கிழமைகளில் ஆகக்குறைந்தது ஒரு மணித்தியாலமாவது தேவ நற்கருணை சந்திப்பு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். கூடுதலாக இச்சந்திப்பு பரிபூரண பயனையும், அருளையும் பெற்றுத்தருகிறது. நற்கருணை ஆண்டவர் எமது வாழ்வில் எல்லாமாக இருக்கிறார். அவரே எமது வாழ்வின் மையமாகவும், உண்மையாகவும், வழியாகவும், உறைவிடமாகவும் இருக்கிறார். நற்கருணை ஆண்டவரை சந்தித்து உரையாட வேண்டும். அவரோடு என்றும் உறவாட வேண்டும். .உண்மையான, உயிரோட்டமுள்ள ஆத்துமாவாக நற்கருணை ஆண்டவரை சந்தித்து எமது வாழ்வை சிறப்பாக்க வேண்டும். தேவநற்கருணை எமது வாழ்வின் ஆன்மீக உணவு, அருமருந்து, வழித்துணை இப்படியாக நாம் தேவநற்கருணையை விபரிக்க முடியும். தேவநற்கருணை எமது வாழ்வின் சக்தியாகவும், வாழ்விற்கு என்றும் ஆற்றலைத் தருபவராகவும் இருக்கிறார்.

**நன்றி**


**அன்புடன்,**

**அருட்பணி யூட் நிக்ஸன்**

Parish Priest

Our Lady of Deliverance Tamil Catholic Mission

Montreal (QC), Canada.